## 11 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை - 06.02.2026

## கழகத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறும் பொதுமக்கள் கூட்டம்!









சென்னை, பிப்.8-

**திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை தோலுரிக்கும் விதமாகவும் தமிழ்நாடு முழுக்க தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடத்தப்பட்டு வருகிறது.**

கழகத் தலைவரது உத்தரவின் பேரில் 06.02.2026 அன்று 11 சட்டமன்றத் தொகுதிகளில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டங்கள் மாபெரும் எழுச்சியோடு நடைபெற்றன.

கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியில் திரு. கடலூர் புகழேந்தி அவர்கள், விழுப்புரத்தில் திரு. எழிலன் நாகநாதன் அவர்கள், ஆவடியில் திரு. கலாநிதி வீராச்சாமி அவர்கள், அம்பத்தூரில் திருமதி. கனிமொழி சோமு அவர்கள், திருப்பெரும்புதூரில் திரு.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள், சேலம் வடக்கில் திரு. தயாநிதி மாறன் அவர்கள், அவிநாசியில் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்கள், மண்ணச்சநல்லூரில் திரு. ஆர். எஸ். பாரதி அவர்கள், குறிஞ்சிப்பாடியில் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், பேராவூரணியில் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், சிவகங்கையில் திரு. பொன்.முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரைக் கூட்டத்தின் போது ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் சரித்திர சாதனைகளையும் அதனால் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சியையும் மக்கள் முன் எடுத்துரைத்தனர் சிறப்பு பேச்சாளர்கள். அத்துடன் ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டதையும், கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, பேரிடர் நிதி என முறையாக எந்த நிதியும் ஒதுக்காமல் , புதிய வளர்ச்சி திட்டங்களுக்கும் அனுமதி அளிக்காமல் முட்டுக்கட்டை போட்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வரும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியின் வஞ்சகத்தை பொது மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள்.

இன்றைய பரப்புரைக் கூட்டங்களுக்கு ஆயிரகணக்கான பொது மக்கள் திரண்டு வந்து ஆதரவு வழங்கினர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பட்டாளமும், பெண்களும் அதிகளவு திரண்டு வந்து ஆதரவு தெரிவித்தனர். அதிமுக பாஜக கூட்டணியால் தமிழ்நாடு பட்ட அவலத்தையும், அந்த டப்பா எஞ்சின் தமிழ்நாட்டில் நுழைந்தால் ஏற்படும் ஆபத்தையும் பேச்சாளர்கள் சுட்டிக் காட்டி பேசியது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது.

---

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு– பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன் சிறப்புரை!

## மதுரை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் அறிக்கை!





*மதுரை, பிப்.8-*

*மதுரை மாவட்ட திமுக சார்பில் வருகிற 21 ஆம் தேதி மதுரையில் நடைபெற உள்ள திமுக தெற்கு மண்டல வாக்குச் சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாடு தொடர்பாக மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தினருக்கான சிறப்பு செயல்வீரர்கள் கூட்டம் நாளை மாலை நடைபெற உள்ளதாகவும் இதில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர் அதன் விபரம்*

*கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு என சூளுரைத்து கடந்த சில மாதங்களாக வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் வரலாறு காணாத வகையில் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைவதை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்.*

*அதன் ஒரு முக்கிய பங்காக வருகிற பிப்ரவரி-21ம் தேதி கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரைத் தேர்தல் பணிக்கு முழுமையாகத் தயார் செய்யும் வகையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” - வாக்குச் சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாடு தெற்கு மண்டலம் மாநாடு மதுரையில் நடைபெறும் என அறிவித்திருந்தார்.*

*இதுவரை கழகத் தலைவர் அறிவித்த அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்திக் காட்டிய மதுரை மாவட்ட திமுக இந்த மாநாட்டையும் வெற்றி மாநாடாக அமைக்க வேண்டும் என்பதற்கான செயல்வீரர்கள் கூட்டம் நாளை 09.02.2026 திங்கள் கிழமை மாலை 5 மணியளவில் மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜே எஃப் ஏ லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*இந்தக் கூட்டத்தில் கழக தேர்தல் மண்டல பொறுப்பாளர் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளனர்.*

*எனவே இந்த முக்கியம் வாய்ந்த இந்த செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்*



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆவடி சட்ட மன்ற தொகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது முன்னெடுப்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி ஆகியோர் கழக மூத்த முன்னோர்களுக்கு பொற்கிழி வழங்கி கௌரவித்து ஆவடி பேருந்து நிலையம் அருகில் உள்ள பேறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தினார்கள். உடன் ஆவடி மேயர் உதயகுமார் ஆவடி பொறுப்பாளர் சன் பிரகாஷ், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ் குமார், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன். விஜயன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

---

### சென்னைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் துணைவேந்தர் சே.சாதிக் அறக்கட்டளை சார்பில்

## பேராசிரியர் மா.செல்வராசன் சிறப்புரையாற்றுகிறார்!

### புரட்சிக் கவிஞர் என்னும் தலைப்பில் ஆய்வுரை!

*சென்னை, பிப். 8-*

இந்தியாவின் மூத்த பல்கலைக் கழகங்கள் மூன்றனுள் முதன்மையான சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி இயக்குநராகவும் திறம்படப் பணியாற்றிய சிறப்புக்கு உரியவர் பேராசிரியர் சே.சாதிக் அவர்கள். இவர் ‘பேராசிரியர் சே.சாதிக் அறக்கட்டளை, என்னும் பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவியுள்ளார். அதற்காகத் தம் சொந்தப் பணம் ஐந்து இலட்சம் ரூபாவை பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆண்டுதோறும் பேராசிரியர் சே சாதிக் அறக்கட்டளைச் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பற்றிச் சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்று உறுதியுரை எழுதியுள்ளார்.

அவர் விழைவிற்கு ஏற்ப இந்த ஆண்டு அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவைச் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர், சென்னைப் பல்கலைக்கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் ‘புரட்சிக் கவிஞர்’ என்னும் தலைப்பில் -ஆய்வுரை வழங்குகின்றார்.இவர் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்னும் பொருள் குறித்துப் பேராசிரியர் மு.வரதராசனார் மேற்பார்வையில் ஆய்வு நிகழ்த்தி 1974 ஆம் ஆண்டு பிஎச்.டி என்னும் முனைவர் பட்டம் பெற்றவர்.இதுவே பாரதிதாசன் பற்றிய முதல் முனைவர்(டாக்டர்) பட்ட ஆய்வு என்பது குறிக்கத்தக்கது!

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறை நடத்தும் இந்த அறக்கட்டளை நிகழ்ச்சி சென்னைப் பல்கலைக்கழக மெரீனா வளாகப் பவளவிழாக் கலையரங்கில் 10.02.2026 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறு கின்றது.

ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டு ஆய்வுச்சாறு அருந்தலாம் என்று சென்னைப் பல்கலைக்கழகம் அழைக்கின்றது.

---

### மாதவரம் நகரக் கழக முன்னாள் செயலாளர் – பொதுக்குழு முன்னாள் உறுப்பினர்

## மா.பொ.வேதா 44-ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதிப் பேரணி!

### தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம்! டி.ராமகிருஷ்ணன், மிசா.பா.மதிவாணன், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!



*சென்னை, பிப்.8*

*மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் தியாக தீபம் மா.பொ. வேதா நினைவு மன்றம் சார்பில் மாதவரம் முன்னாள் நகரக் கழகச் செயலாளர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் மா.பொ.வேதா அவர்களின் 44 ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி இன்று (8.2.2026) காலை 8.30 மணி அளவில் மாதவரம் கணக்கன் சத்திரம் அண்ணா சிலை, ஜி.என்.டி. சாலையிலிருந்து புறப்பட்டு அவரது நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படுகிறது.*

*இப்பேரணிக்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.*

*சென்னை வடகிழக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் மா.பொ.வேதா நினைவு மன்ற செயலாளருமான டி.ராமகிருஷ்ணன், மிசா. பா.மதிவாணன், கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., எஸ்.நந்தகோபால் எம்.சி., மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி. துக்காராம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 28 வது வட்டக் கழக செயலாளர் எம்.பிரேம் குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சிக்கு வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், எம்.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி, வை.ம. அருள்தாசன், சி.அற்புதராஜ், ஜி.தயாளன், மீ.வே.கர்ணாகரன், ஆர். டி.சுதாகர், வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய் மதன், இரா. முருகேசன், டி.ஏ.ராஜி. பி. சாந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் மு.சிவகுமார், பி.தமிழரசன் (எ) தம்பையா, கே.பி.சொக்கலிங்கம், டி.சி. வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், நந்தினி சண்முகம், ஜி . ரா ஜே ந் தி ர ன் , கே.காசிநாதன், ஜெ.ஆஸ்னா மெரிஷியா, ஏ.சந்திரன், எஸ். கனிமொழி சுரேஷ், டி.கார்த்திகேயன், ஜி.திருமலை துரைசாமி, எம்.குணசுந்தரி குட்டி மோகன்,*

*வட்டக் கழக நிர்வாகிகள் சி.கே.கோபால், எஸ்.எம்.பன்னீர்செல்வம், டி.ஆர்.செங்குட்டுவன், எஸ்.எம்.மோகன், டி.ஆர்.ரவிந்திர குமார், ஏ.சசிகுமார், காந்திமதி உதயசூரியன், எஸ்.நிசார் அஹமத், ஏ.ஜெயசெல்வி அசோக்குமார், கே.பி. உசேந்திரன், ஏ.முனுசாமி, சி.கே.ஜி.தர்மராஜ், டி.சந்திரன், மா. பொ.வே.ராஜா, எஸ்.கரண்ராஜ், பி.காசிராஜன், ஆசைத்தம்பி, புத்தகரம் இ.ஏழுமலை, எம்.சி., வி.எஸ்.ஆர்.ஜெயக்குமார், இ.மோகன், ஆ.விஜயலட்சுமி, ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாட்டினை தியாக தீபம் மா.பொ.வேதா நினைவு மன்றம் மற்றும் 28-வது வட்டக் கழக நிர்வாகிகள் செய்துள்ளனர்.*




திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோட்டக்கரை பகுதியில் ரூபாய் 20 லட்சம் மதிப்பில் பேருந்து நிழற்குடை மற்றும் ரூபாய் 15 லட்சம் மதிப்பில் ஜி.என்.டி.ரோடு ரெட்டம்பேடு சாலை சந்திப்பு பகுதியில் அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடைகளை தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் மு. மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், சகிலா அறிவழகன், மு.கேசவன், மு.பாஸ்கர், எஸ். ராமஜெயம், அப்துல்கரீம், எஸ்.எம்.திருநாவுகரசு, டி.காளிதாஸ், கருணாகரன், சூப்முனியாண்டி, உமாபதி, அர்ஜீனன், பா.பரத்குமார், பிரகாஷ், சாண்டில்யன், போண்டாசிவா, நந்தகோபால், நித்தியானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.